# <u>கோயம்புத்துா் மாநகராட்சி</u>

அனுப்புநா்

திரு ஆா். வெங்கடாசலம்,
மேயா்,
கோயம்புத்துா் மாநகராட்சி,
கோயம்புத்துா்- 641 001

பெறுநா்

மதிப்பிற்குரிய துணை மேயா் அவா்கள்,
ஆளும்கட்சி / எதிா் கட்சித் தலைவா்கள்,
வாா்டு குழுத் தலைவா்கள்,
நியமனக்குழு உறுப்பினா்,
நிலைக்குழு தலைவா்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினா்கள்,
கோயம்புத்துா் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்துா் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினா்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்துா், பேரூா் மற்றும்
சிங்காநல்லுா் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினா்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>ந.க.எண் : **1126 / 2009 /** எம்சி. **8** நாள் : **17.2.2009**</u>

<u>அய்யா /அம்மா,</u>

பொருள் : கோயம்புத்துா் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடா்பாக.
-----------

கோயம்புத்துா் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **19.2.2009** வியாழக்கிழமை காலை **10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயா் அவா்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினா்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலா்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறாா்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்துா் மாநகராட்சி

இணைப்பு : **1**

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளா்
17/2/09

நகல் :

துணை ஆணையாளா் அவா்கள், கோயம்புத்துா் மாநகராட்சி
ஆணையாளா் அவா்கள், கோயம்புத்துா் மாநகராட்சி

பிப்ரவரி 2009 - மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | Jnnurm –பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - சிப்பம் எண் 4 பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 2 | Jnnurm –பில்லூரி 2-ம் குடிநீர் திட்டம் - சிப்பம் எண் 5 பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 3 | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் எண் 1 பணி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 4 | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் எண் 2 பணி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 5 | Jnnurm – ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் - சிப்பம் எண் 3 பணி –ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 6 | Jnnurm – பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - சிப்பம் எண் 6 பணி – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 7 | வடக்கு மண்டலம் - 33-வது வார்டு – யார்டு சாலை-மீன்வளத்துறையினருக்கு இடம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | வடக்கு மண்டலம் -நகரமைப்புப் பிரிவு - பீளமேடு எல்லைத் தோட்டம் சாலை முதல் அவிநாசி சாலை வரை இணைப்புச் சாலை அமைத்தல் மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | தெற்கு மண்டலம் - உக்கடம் மீன்விற்பனை சந்தை – மீன்வளத் துறைக்கு ஒதுக்கி மேம்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |

நன்றியுரை

## திருக்குறள்

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கங் கடிந்து செயல்.**

**(குறள் -668)**

## விளக்கம்

**மனக் குழப்பமின்றித் தெளிவாக முடிவு செய்யப்பட்ட ஒரு செயலைத் தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.**

**திருவள்ளுவர்.**

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

## சிறப்புத் தீர்மானம் எண் 1

1) இன்றைய தினம் அருகாமையில் உள்ள ஈழத்தில் தமிழ் இனத்தைச் சார்ந்த சகோதரர்கள் கொல்லப்படுவதும், தமிழச்சிகள் அன்றாடம் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. இதுகுறித்து கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் சட்ட மன்றத்திலேயே ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றி இந்திய பிரதமருக்கு அனுப்பியிருக்கின்றார். அதே போன்று பல்வேறு கட்சியை சார்ந்தவர்களும் இதற்காக கண்டனக் குரல்களை எழுப்பியுள்ளதாகவும், அந்த அடிப்படையிலே இம்மாநகராட்சியின் திராவிட முன்னேற்றக் கழக மாமன்ற குழுவினுடைய மாமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாகவும், இந்திய அரசு உடனடியாக அங்கு போர்நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுத்து ஈழத் தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்கின்ற தீர்மானத்தை திராவிட முன்னேற்றக் கழகம் முன்மொழிகின்றது என தி.மு.க. மாமன்ற குழுத் தலைவர் தீர்மானத்தை வாசித்தார்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வழி மொழிவதாக ஆளும் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2) இந்திய துணைக் கண்டத்தின் தென்முனையில் இலங்கைத்தீவில் வாழும் தமிழர்கள் மீது இலங்கையில் ஆளும் சிங்கள இனவாத அரசு, கொடும் அடக்குமுறைகளை தொடுத்துள்ளது. இலங்கையில் இருந்து கிடைக்கும் செய்திகள் ஜனநாயக உள்ளம் படைத்த எவரையும் கலங்கச் செய்யும்.

இலங்கையில் சிங்கள பத்திரிக்கையாளருக்கும்கூட சுதந்திரம் இல்லை. அரசின் பாசிச அடக்குமுறைகளை கண்டித்து எழுதிய சண்டே லீடர் பத்திரிக்கை நிருபரை சுட்டுக் கொலை செய்துள்ளனர். தம்பி தமிழ்பெண்ணை திருமணம் செய்ததால் அண்ணனையும் அவர் மனைவியையும் கைது செய்த கொடுமைகள் நடந்தேறியுள்ளது. தப்பிவந்த சிங்கள காதல் தம்பதிகளை குற்றவாளிகளாக நடத்தாமல் அகதிகளாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை தியாகியாகிப்போன திரு. முத்துக்குமரன் கோரியதும் நடந்தேறியுள்ளது. இந்நிகழ்வுகள் இலங்கையில் நடப்பது இனவாத அரசுதான் என்பதற்கு சான்றாகும்.

தமிழ் மக்களை கொல்லும் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். மக்களை கொல்வதற்கு இனவாத அரசுக்கு ஆயுதங்களை இந்திய அரசு வழங்குவது நிறுத்தப்பட வேண்டும். உலகின் பலநாடுகளின் கோரிக்கையை தமிழக சட்டமன்றம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது. அரசியல் சட்டப்படி தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் ஒருமனதான தீர்மானத்தை இந்திய அரசு உடனே நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரை உடனே நிறுத்த ஆசியாவின் பெரிய ஜனநாயக நாடான இந்தியா எல்லா வழிமுறைகளையும் கையாளவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றவேண்டும் என சி.பி.ஐ. மாமன்ற குழுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

**மா.ந.ம. தீ. எண். 352 நாள் 19.2.2009**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமாக பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி அரசு ஆணை எண்.551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. ஐந்து சிப்பங்களுக்கான பணியினை மேற்கொள்ளவும் ஒப்பந்தவிலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் சிப்பம் (4) பணியின் விபரம்.

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகாரம் எண் |
|---|---|---|---|
| IV | வெள்ளியங்காடு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கட்டன் மலை குகை நுழைவு வரை 1100 எம்.எம். MS பிரதான குழாய் அமைக்கும் பணி. | 2378.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 29 / 2008–09 |

கடந்த 17.12.2008–ல் மூன்றாவது முறையாக சிப்பம் (4) நான்கிற்கான தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட எட்டு (8) நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s. SEW- Taher Ali (Joint Venture), Hyderabad**
   **(M/s எஸ். இ. டபிள்யூ. தாகர் அலி (ஜாயினட் வென்சர்), ஹைதராபாத்.)**

2. **M/s. SaiSudhir Infrastructure Ltd., Hyderabad**
   **(M/s சாய்சுதீர் இன்ப்ராஸ்ரக்ட்சர் லிமிடெட்., ஹைதராபாத்.)**

3. **M/s. Pratibha Industries Ltd., Mumbai**
   **(M/s பிரதீபா இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்., மும்பை)**

4. **M/s Nagarjuna Constructions, Hyderabad.**
   **(M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத்)**

5. **M/s Koya Company Constructions Ltd., Hyderabad**
   **(M/s கோயா கம்பெனி கன்ஸ்ட்ரக்சன்ஸ், லிட்., ஹைதராபாத்.**

6. **M/s. Indian Hume Pipe Co., Ltd., Mumbai**
   **(M/s இன்டியன் ஹுயூம் பைப் கம்பெனி, லிமிடெட், மும்பை)**

7. **M/s. Offshore Infrastructures Ltd., Mumbai.**
   **(M/s ஆப்ஸோர் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட்., மும்பை)**

8. **M/s. Vishwa Infrastructures and Services (P), Ltd., Chennai.**
   **(M/s விஸ்வா இன்ப்ராஸ்ரக்ட்சர் அன்டு சர்வீசஸ் பி. லிமிடெட், சென்னை)**

மேற்கண்ட எட்டு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதியினை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் ( TWIC ) ஆய்வு செய்து அறிக்கை தந்ததின் பேரில், மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு ( Tenders Scrutiny Committee ) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கமிட்டியின் தொழில்நுட்ப தகுதி ஆய்விற்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 28.01.09–ல் ஆய்வு அனுமதி பெறப்பட்டதில் கீழ்கண்ட ஏழு நிறுவனங்கள் மட்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றது.

1. **M/s. SEW- Taher Ali (Joint Venture), Hyderabad**
   **(M/s எஸ். இ. டபிள்யூ. தாகர் அலி (ஜாயின்ட் வென்சர்), ஹைதராபாத்.)**

2. **M/s. SaiSudhir Infrastructure Ltd., Hyderabad**
   **(M/s சாய்சுதீர் இன்ப்ராஸ்ரக்ட்சர் லிமிடெட்., ஹைதராபாத்.)**

3. **M/s. Pratibha Industries, Ltd., Mumbai**
   **(M/s பிரதீபா இன்ப்ராஸ்ரக்ட்சர் லிமிடெட்., மும்பை)**

4. **M/s Nagarjuna Constructions, Hyderabad.**
**(M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத்)**

5. **M/s Koya Company Constructions Ltd., Hydrabad**
**(M/s கோயா கம்பெனி கன்ஸ்ட்ரக்சன்ஸ், லிட்., ஹைதராபாத்)**

6. **M/s. Indian Hume Pipe Co., Ltd., Mumbai**
**(M/s இன்டியன் ஹுயூம் பைப் கம்பெனி, லிமிடெட், மும்பை)**

7. **M/s. Vishwa Infrastructures and Services (P), Ltd., Chennai.**
**(M/s விஸ்வா இன்ப்ராஸ்ரக்ட்சர் அன்டு சர்வீசஸ் பி. லிமிடெட், சென்னை)**

**மேற்கண்ட தகுதிவாய்ந்த (7) ஏழு நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 10.02.2009–ல் திறக்கப்பட்டு ஒப்பந்தவிலைப்புள்ளியில் வரிசைபடுத்தப்பட்ட ஒவ்வொரு தனித்தனி பணிக்கான விலை விபரத்தினை எடுத்து, கணக்கிட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி மதிப்பீட்டு தொகைக்கு அதிகமான ஒப்பந்த மதிப்பு தரப்பட்டு இருந்தது.**

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த விலை புள்ளி விபரம் ரூபாயில் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|
| 1. | M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத் | 23,55,46,980.00 | ரூ. 25,87,16,168.98 | 9.84 % |
| 2. | M/s இன்டியன் ஹுயூம் பைப் கம்பெனி, லிமிடெட், மும்பை | | ரூ. 31,33,84,156.80 | 33.05 % |
| 3. | M/s கோயா கம்பெனி கன்ஸ்ட்ரக்சன்ஸ், லிட்., ஹைதராபாத். | | ரூ. 29,08,65,731.37 | 23.49 % |
| 4. | M/s எஸ். இ. டபிள்யூ. தாகர் அலி (ஜாயின்ட் வென்சர்), ஹைதராபாத். | | ரூ. 30,32,34,069.28 | 28.74 % |
| 5. | M/s சாய்சுதீர் இன்ப்ராஸ்ரக்ட்சர் லிமிடெட்., ஹைதராபாத் | | ரூ. 30,42,55,876.34 | 29.17 % |
| 6. | M/s விஸ்வா இன்ப்ராஸ்ரக்ட்சர் அன்டு சர்வீசஸ் பி. லிமிடெட், சென்னை | | ரூ. 10,13,95,451.43 | 43.05 % |
| 7. | M/s பிரதீபா இன்ப்ராஸ்ரக்ட்சர் லிமிடெட்., மும்பை | | ரூ. 34,40,34,622.40 | 46.06 % |

மேற்கண்ட ஏழு நிறுவன ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத், நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 9.84% சதவீதம் அதிகமாகவும், இதர ஆறு நிறுவன ஒப்பந்த விலைப்புள்ளிக்கும் குறைவாக இருந்ததால் பொறியியல் நடைமுறை விதி எண். 2.8—ன்படி மேற்கண்ட நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்திட கடந்த 11.02.2009 மற்றும் 13.02.2009—ல் கோரப்பட்டது.

மேற்படி நிறுவனம் தனது 9.84% ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு அதிகமான ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய விபரத்தினை தெரிவித்து, விலை குறைப்பு வழங்க இயலாத நிலையினை தனது 13.02.2009—ம் தேதிய கடிதத்தில் தெரிவித்தது.

எனவே மதிப்பீட்டு தொகைக்கும் 9.84% அதிகமாக பெறப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்தும், ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்தும் முடிவு செய்ய மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு — 1. மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு" அரசால் அரசாணை எண்.34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006—ன்படி அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" பரிசீலினைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு மூன்றாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.84% சதவீதம் அதிகமாக உள்ளது. திட்டப்பணி துவக்க மேலும் காலதாமதம் ஆகுமென்பதால், வரும் நிதியாண்டில் மீண்டும் திருத்திய மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தவிலைப்புள்ளி கோரும் நிலை ஏற்படுமென்பதால் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனைக்கு மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீடு தொகைக்கு மேல் இச்சிப்ப பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4613/ 2008 /ஜே.எண். 2 (தொகுப்பு IV)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 353 நாள் : 19.02.2009</u>

இப்பணிக்கு ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையைவிட 9.84% சதவீதம் கூடுதலாக ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s. நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும், அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக இப்பணியினை மேற்கொள்வதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 2

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமாக பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி அரசு ஆணை எண்.551(டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. ஐந்து சிப்பங்களுக்கான பணியினை மேற்கொள்ளவும் ஒப்பந்தவிலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் சிப்பம் (5) பணியின் விபரம்.

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகாரம் எண் |
|---|---|---|---|
| V | கட்டன் மலை குகை வெளியேற்றத்திலிருந்து ராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத் தொட்டி வரை 1100 முதல் 1500 எம்.எம் வரை எம்.எஸ். (MS) குழாய் அமைத்தல். | ரூ. 5600.00 (திருத்திய மதிப்பீடு) | 84 / 2008 / 2009 |

கடந்த 17.12.2008–ல் இரண்டாவது முறையாக சிப்பம் (5) ஐந்திற்கான தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட ஆறு(6) நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s Nagarjuna Constructions, Hyderabad.**
   **(M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத்)**

2. **M/s. Indian Hume Pipe Co., Ltd., Mumbai**
   **(M/s இன்டியன் ஹியூம் பைப் கம்பெனி லிமிடெட், மும்பை)**

3. **M/s Koya Company Constructions Ltd., Hydrabad**
   **(M/s கோயா கம்பெனி கன்ஸ்ட்ரக்சன்ஸ் லிட்., ஹைதராபாத்.)**

4. **M/s IVRCL Infrastructures & Projects, Ltd., Chennai**
   **(M/s ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ரக்ட்சர் அன்டு பிராஜெக்ட்ஸ் லிட். சென்னை)**

5. **M/s. SEW- Taher Ali (Joint Venture), Hyderabad**
   **(M/s எஸ். இ. டபிள்யூ. தாகர் அலி (ஜாயின்ட் வென்சர்), ஹைதராபாத்.)**

6. **M/s P & C Constructions (P) Ltd., Erode**
   **(M/s பி & சி கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பி) லிட்., ஈரோடு.)**

மேற்கண்ட ஆறு நிறுவனங்களின் தொழில் நுட்ப தகுதியினை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் ( TWIC ) ஆய்வு செய்து அறிக்கை தந்ததின் பேரில், மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு ( Tenders Scrutiny Committee ) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில் நுட்ப கமிட்டியின் தொழில் நுட்ப தகுதி ஆய்விற்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 28.01.09–ல் ஆய்வு அனுமதி பெறப்பட்டதின் பேரில் கீழ்கண்ட ஐந்து நிறுவனங்கள் மட்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றது.

1. **M/s Nagarjuna Constructions, Hyderabad.**
   **(M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத்)**

2. **M/s. Indian Hume Pipe Co., Ltd., Mumbai**
   **(M/s இன்டியன் ஹியூம் பைப் கம்பெனி, லிமிடெட், மும்பை)**

3. **M/s Koya Company Constructions Ltd., Hydrabad**
(M/s கோயா கம்பெனி கன்ஸ்ட்ரக்சன்ஸ், லிட்., ஹைதராபாத்.)

4. **M/s IVRCL Infrastructures & Projects, Ltd., Chennai**
(M/s ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ரக்ட்சர் அன்டு பிராஜெக்ட்ஸ்., லிட். சென்னை)

5. **M/s. SEW- Taher Ali (Joint Venture), Hyderabad**
(M/s எஸ். இ. டபிள்யூ. தாகர் அலி (ஜாயின்ட் வென்சர்), ஹைதராபாத்.)

மேற்கண்ட தகுதிவாய்ந்த ஐந்து நிறுவனங்களின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 10.02.2009—ல் திறக்கப்பட்டு ஒப்பந்தவிலைப்புள்ளியில் வரிசைபடுத்தப்பட்ட ஒவ்வொரு தனித்தனி பணிக்கான விலை விபரத்தினை எடுத்து கணக்கிட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி மதிப்பீட்டு தொகைக்கு அதிகமாக ஒப்பந்தமதிப்பு தரப்பட்டு இருந்தது.

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த விலை புள்ளி விபரம் ரூபாயில் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|
| 1. | M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத். | 52,32,74,234.00 | ரூ. 57,16,88,744.00 | 9.25 % |
| 2. | M/s இன்டியன் ஹியூம் பைப் கம்பெனி, லிமிடெட், மும்பை | | ரூ. 66,45,75,811.00 | 27.00 % |
| 3. | M/s கோயா கம்பெனி கன்ஸ்ட்ரக்சன்ஸ், லிட்., ஹைதராபாத். | | ரூ. 60,89,58,907.00 | 16.37 % |
| 4. | M/s ஐ.வி.ஆர்.சி.எல் இன்ப்ராஸ்ரக்ட்சர் அன்டு பிராஜெக்ட்ஸ்., லிட்.சென்னை | | ரூ. 75,32,12,841.00 | 43.94 % |
| 5. | M/s எஸ். இ. டபிள்யூ. தாகர் அலி (ஜாயின்ட் வென்சர்), ஹைதராபாத்.) | | ரூ. 60,16,72,970.00 | 14.98 % |

மேற்கண்ட ஐந்து நிறுவன ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத், நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 9.25% சதவீதம் அதிகமாகவும், இதர நான்கு நிறுவன ஒப்பந்த விலைப்புள்ளிக்கும் குறைவாக இருந்ததால் பொறியியல் நடைமுறை விதி எண். 2.8—ன்படி மேற்கண்ட நிறுவனத்திடம் விலை குறைப்பு செய்திட கடந்த 11.02.2009 மற்றும் 13.02.2009—ல் கோரப்பட்டது.

மேற்படி நிறுவனம் தனது 9.25% ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு அதிகமான ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய விபரத்தினை தெரிவித்து, விலை குறைப்பு வழங்க இயலாத நிலையினை தனது 13.02.2009—ம் தேதிய கடிதத்தில் தெரிவித்தது.

எனவே மதிப்பீட்டு தொகைக்கும் 9.25% அதிகமாக பெறப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்தும், ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிந்துரைக்கு அனுப்புவது குறித்தும் முடிவு செய்ய மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – 1. மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு" அரசால் அரசாணை எண்.34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" பரிசீலினைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு இரண்டாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் M/s நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 9.25% சதவீதம் அதிகமாக உள்ளது. திட்டப்பணி துவக்க மேலும் காலதாமதம் ஆகுமென்பதால், வரும் நிதியாண்டில் மீண்டும் திருத்திய மதிப்பீடு தயாரித்து ஒப்பந்தவிலைப்புள்ளி கோரும் நிலை ஏற்படுமென்பதால் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனைக்கு மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீடு தொகைக்கு மேல் இச்சிப்ப பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4614/ 2008 /ஜே.எண். 2 (தொகுப்பு V)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 354 நாள் : 19.02.2009</u>

இப்பணிக்கு மதிப்பீட்டுத் தொகையைவிட 9.25% சதவீதம் கூடுதலாக ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s. நாகார்ஜுனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும், அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.
நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக இப்பணியினை மேற்கொள்வதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

கோவை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அரசு ஆணை எண். 551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டது. பாதாள சாக்கடை திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் I பகுதி பணியின் விபரம்:

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| I | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – I, II, V மற்றும் VI-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.7805.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 52 / 2008–09 |

இப்பணிக்கு இரண்டாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கடந்த 17.12.2008–ல் கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரு நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்தவிலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

**1. M/s Subaya Constructions Private Ltd., Chennai**
**(மெசர்ஸ். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிட்., சென்னை)**

மேற்படி நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதியினை மாநகராட்சி ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப குழுவின் தொழில் நட்ப ஆய்விற்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 28.01.2009–ல் ஆய்வு அனுமதி பெறப்பட்டதின் பேரில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 09.02.2009–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விபரமும், மேற்படி நிறுவனத்திடம் பொறியியல் நடைமுறை விதி எண். 2.8–ன் படி, விலை குறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்பேரில் இந்நிறுவனத்திடமிருந்து இரண்டு முறை பெறப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரமும் பின் வருமாறு:

| வ. எண். | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்த விலை புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்த விலை புள்ளி விபரம் (விலைகுறைப்பிற்கு பின்னர்) | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | **M/s Subaya Constructions Private Ltd., Chennai** | ரூ.57,57,23,559.00 | ரூ.826220015.00<br>நாள்: 09.02.2009 | –<br>12.02.2009<br>13.02.2009 | –<br>ரூ.78,46,51,353.00<br>ரூ.77,65,06,253.00 | + 43.51 %<br>+ 36.29%<br>+ 34.87% |

இரண்டாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி இரண்டாவது முறையாக விலைகுறைப்புக்குப் பின்னரும் **M/s Subaya Constructions Private Ltd., Chennai,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 34.87% அதிகமாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

அ) மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைபுள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான ''ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு'' அரசால் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய ''ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழுவின்'' பரிசீலனைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு இரண்டாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள **M/s. Subaya Constructions Private Ltd., Chennai** என்ற நிறுவனத்தின் ஒரே ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளி இரண்டாவது முறையாக விலை குறைப்புக்கு பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 34.87% கூடுதலாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகைக்கு மேல் இச்சிப்பப்பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்தோ அல்லது பாதாள சாக்கடை திட்ட வைப்பு நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 12069 / 2006 / ஜே.என். 2

**மா.ந.ம.தீர்மானம் எண் : 355 நாள் : 19.02.2009**

இப்பணிக்கு இரண்டாம் முறையாக ஒப்பந்த விலைப்புள்ளி கோரியிருந்தாலும், M/s. சுப்பையா கன்ஸ்ட்ரக்சன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையைவிட 43.51% சதவீதம் கூடுதலாக வழங்கி இரண்டாவது விலைக்குறைப்பிற்கு பின்னரும் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி 34.87% சதவீதம் கூடுதலாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு தெரிவிக்கவும் மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 4

கோவை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அரசு ஆணை எண். 551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டது. பாதாள சாக்கடை திட்டப்பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் II பணியின் விபரம்:

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| II | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – III மற்றும் VII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.5708.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 27 / 2008–09 |

இப்பணிக்கு கடந்த 18.09.2008–ல் இரண்டாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரு நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s SEW-TCL, (JV) Constructions Limited, Hyderabad,**
   (மெசர்ஸ். எஸ் இ டபிள்யூ அன்டு டி சி எல் , (ஜெ.வி) கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட், ஹைதராபாத்)

மேற்படி நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதியினை மாநகராட்சி ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப குழுவின் தொழில் நுட்ப தகுதி ஆய்வுக்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 02.12.2008–ல் ஆய்வு அனுமதி பெறப்பட்டதின் பேரில், மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 17.12.2008–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விபரமும், மேற்படி நிறுவனத்திடம் பொறியியல் நடைமுறை விதி எண் 2.8–ன் படி, விலை குறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்பேரில் இந்நிறுவனத்திடமிருந்து ஆறு முறை பெறப்பட்ட விலைக்குறைப்பு கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரமும் பின் வருமாறு:

| வ. எண். | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த விலை புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்த விலை புள்ளி விபரம் (விலைகுறைப்பிற்கு பின்னர்) | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | **1. M/s SEW-TCL, (JV) Constructions Limited Hyderabad,** | ரூ.45,70,37,065.00 | ரூ.859002681.20<br>நாள்: 17.12.2008 | –<br>24.12.2008<br>26.12.2008<br>09.01.2009<br>09.01.2009<br>15.01.2009<br>11. 02. 2009 | –<br>ரூ.76,28,14,887.00<br>ரூ.73,12,00,000.00<br>ரூ.69,16,00,000.00<br>ரூ.66,50,00,000.00<br>ரூ.65,35,00,000.00<br>ரூ.65,35,00,000.00 | + 87.95 %<br>+ 66.90%<br>+ 59.99%<br>+ 51.32%<br>+ 45.50%<br>+42.99%<br>+39.81% |

இரண்டாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தவிலைப்புள்ளி ஆறாவது முறையாக விலைகுறைப்புக்குப் பின்னரும் **M/s SEW-TCL, (JV) Constructions Limited, Hyderabad,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 39.81% அதிகமாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைபுள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான ''ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு'' அரசால் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய ''ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழுவின்'' பரிசீலனைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு இரண்டாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள **M/s. SEW-TCL,** என்ற நிறுவனத்தின் ஒரே ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளி ஆறாவது முறையாக விலை குறைப்புக்கு பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 39.81% கூடுதலாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனைக்கு அனுப்பவும் குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகைக்கு மேல் இச்சிப்பப்பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்தோ அல்லது பாதாள சாக்கடை திட்ட வைப்பு நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 12069 / 2006 / ஜே.என். 2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 356 நாள் : 19.02.2009</u>

இப்பணிக்கு இரண்டாம் முறையாக ஒப்பந்த விலைப்புள்ளி கோரியிருந்தாலும், M/s. எஸ் இ டபிள்யு அன்டு டிசிஎல், (ஜெ.வி) கன்ஸ்ட்ரக்சன்ஸ் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையைவிட 87.95% சதவீதம் கூடுதலாக வழங்கி ஆறாவது விலைக்குறைப்பிற்கு பின்னரும் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி 39.81% சதவீதம் கூடுதலாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு தெரிவிக்கவும் மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 5

கோவை மாநகராட்சியில் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 377.13 கோடி செலவில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அரசு ஆணை எண். 551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டது. பாதாள சாக்கடை திட்டப் பணி ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில் சிப்பம் III பகுதி பணியின் விபரம் :

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| III | பாதாள சாக்கடைத்திட்டம் – மண்டலங்கள் – IV மற்றும் VIII-ல் கழிவு நீர் குழாய்கள் அமைக்கும் பணி | ரூ.13333.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 15 / 2008–09 |

இப்பணிக்கு இரண்டாம் முறையாக கடந்த 18.09.2008–ல் தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரு நிறுவனம் மட்டும் கலந்து கொண்டு தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. **M/s SEW-TCL, (JV) Constructions Limited, Hyderabad,**
   (மெசர்ஸ். எஸ் இ டபிள்யூ அன்டு டி சி எல், (ஜெ.வி) கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட், ஹைதராபாத்)

மேற்படி நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதியினை மாநகராட்சி ஒப்பந்த கூராய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப குழுவின், தொழில் நுட்ப தகுதி ஆய்வுக்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 02.12.2008–ல், ஆய்வு அனுமதி பெறப்பட்டதின் பேரில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 17.12.2008–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விபரமும், மேற்படி நிறுவனத்திடம் பொறியியல் நடைமுறை விதி எண் 2.8 படி, விலை குறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்பேரில் இந்நிறுவனத்திடமிருந்து ஆறாவது முறை வரப்பெற்ற விலைக்குறைப்பு கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரமும் பின் வருமாறு:

| வ. எண். | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | ஒப்பந்த விலை புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்த விலை புள்ளி விபரம் (விலைகுறைப்பிற்கு பின்னர்) | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு (அதிகம்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | **M/s SEW-TCL, (JV) Constructions Limited Hyderabad,** | ரூ.94,92,50,333.00 | ரூ.1768667975.47<br>நாள்: 17.12.2008 | –<br>24.12.2008<br>26.12.2008<br>09.01.2009<br>09.01.2009<br>15.01.2009<br>11.02.2009 | –<br>ரூ.1,54,46,73,179.00<br>ரூ.1,48,00,00,000.00<br>ரூ.1,40,46,68,000.00<br>ரூ.1,37,50,00,000.00<br>ரூ.1,32,85,00,000.00<br>ரூ.1,29,60,00,000.00 | + 86.32%<br>+ 62.73%<br>+ 55.91%<br>+ 47.98%<br>+ 44.85%<br>+ 39.95%<br>+ 36.53% |

இரண்டாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்த விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தவிலைப்புள்ளி ஆறாவது முறையாக விலைகுறைப்புக்குப் பின்னரும் **M/s SEW-TCL, (JV) Constructions Limited, Hyderabad,** என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கும் 36.53% அதிகமாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

அ) மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைபுள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான "ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு" அரசால் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டு உள்ளதால், மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய "ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழுவின்" பரிசீலனைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு இரண்டாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள **M/s SEW-TCL, (JV) Constructions Limited, Hyderabad,** என்ற நிறுவனத்தின் ஒரே ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளி ஆறாவது முறையாக விலை குறைப்புக்கு பின்னரும் ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 36.53% கூடுதலாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனைக்கு அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகைக்கு மேல் இச்சிப்பப்பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை, மாநகராட்சி நிதியிலிருந்தோ அல்லது பாதாள சாக்கடை திட்ட வைப்பு நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 12069 / 2006 / ஜே.என். 2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 357 நாள் : 19.02.2009</u>

இப்பணிக்கு இரண்டாம் முறையாக ஒப்பந்த விலைப்புள்ளி கோரியிருந்தாலும், M/s. எஸ் இ டபிள்யு அன்டு டிசிஎல், (ஜெ.வி) கன்ஸ்ட்ரக்சன்ஸ் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையினைவிட 86.32% சதவீதம் கூடுதலாக வழங்கி ஆறாவது விலைக்குறைப்பிற்கு பின்னரும் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி 36.53% சதவீதம் கூடுதலாக உள்ளதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவிற்கு தெரிவிக்கவும் மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 6

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமாக பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி அரசு ஆணை எண்.551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டது. ஐந்து சிப்பங்களுக்கான பணியினை மேற்கொள்ளவும் ஒப்பந்தவிலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் சிப்பம் (6) பணியின் விபரம்.

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகாரம் எண் |
|---|---|---|---|
| VI | ராமகிருஷ்ணாபுரத்தில் 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பிரதான மேல்நிலை தொட்டி (MSR) கட்டுதல். | 380.00 (திருத்திய மதிப்பீடு) | 30 / 2008 / 2009 |

கடந்த 11.12.2008–ல் மூன்றாவது முறையாக சிப்பம் (6) ஆறாவது பணிக்கான தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒரு (1) நிறுவனம் மட்டும் தொழில் நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) வழங்கியது.

1. M/s. Jothi Engineering Company, Tiruppur
(M/s ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர்)

மேற்கண்ட நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதியினை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் ( TWIC ) ஆய்வு செய்து அறிக்கை தந்ததின் பேரில், மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு ( Tenders Scrutiny Committee ) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கமிட்டியின் தொழில்நுட்ப தகுதி ஆய்விற்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 28.01.09–ல் ஆய்வு அனுமதி பெறப்பட்டதின் பேரில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 09.02.2009–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விபரமும் மேற்படி நிறுவனத்திடம் பொறியியல் நடைமுறை விதி எண்.2.8–ன்படி விலைகுறைப்பு செய்திட சம்மதக்கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்பேரில் இந்நிறுவனத்திடமிருந்து இரண்டுமுறை பெறப்பட்ட விலைகுறைப்பு கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்குபட்டியல் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்த விலை புள்ளி விபரம் ரூபாயில் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்தவிலைப் புள்ளி விபரம் (விலைகுறைப்புக்கு பின்னர்) | மதிப்பீட்டு தொகைக்கு அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | M/s ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் | ரூ.3,60,86,328.00 | ரூ.6,23,35,485.00 | -<br>13.02.09<br>16.02.09 | –<br>ரூ.5,31,09,834.00<br>ரூ.4,68,76,286.00 | + 72.74 %<br>+ 47.17 %<br>+ 29.90 % |

மூன்றாவது முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தவிலைப்புள்ளி இரண்டாவது முறையாக விலைகுறைப்பிற்கு பின்னரும் M/s ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 29.90% அதிகமாக உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – 1. மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைப்புள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு" அரசால் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006–ன்படி அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்த விலைப்புள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய "ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின்" பரிசீலனைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு மூன்றாம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் M/s ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 29.90% சதவீதம் அதிகமாக உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனைக்கு மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை அனுப்பவும், குழு மேற்கொள்ளும் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3. அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீடு தொகைக்கு மேல் இச்சிப்ப பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 4615/ 2008 /ஜே.எண். 2 (தொகுப்பு VI)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 358 நாள் : 19.02.2009**

இப்பணிக்கு ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையைவிட 72.74% சதவீதம் கூடுதலாக ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கி இரண்டாவது விலை குறைப்பிற்குப் பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையைவிட 29.90% சதவீதம் கூடுதலாக ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/s. ஜோதி இன்ஜினியரிங் கம்பெனி, திருப்பூர் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளியினை ஒப்பந்தப் புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும், அக்குழுவின் முடிவினை ஏற்கவும் மாமன்றம் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகைக்கும் கூடுதலாக இப்பணியினை மேற்கொள்வதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 7**

பொருள். கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 33 வது வார்டு டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் - மீன் வளத்துறையினருக்கு 10’ X 11’ அளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்விடத்தில் சற்று கூடுதல் இடம் ஒதுக்கீடு கொடுக்க கேட்டுள்ளது – தொடர்பாக.

- - -

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் மீன் வளத்துறையினருக்கு மாமன்ற தீர்மான எண். 179, நாள். 29.08.08 ன் படி 10’ X 11’ அளவு கொண்ட இடத்தை ரூ. 3,386 /- மாதாந்திர உரிமக் கட்டணம் (வாடகை) அடிப்படையில் தற்காலிகமாக நிபந்தனைகளுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திலிருந்து தமிழகத்தில் உள்ள பெரிய நகரங்களில் நவீன மீன் அங்காடி அமைத்திடுவதற்கு **NADB (National Agricultural Development Board)** மற்றும் **NFDB (National Fisheries Development Board )** ஆகியவற்றிலிருந்து ரூ. 50 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே சென்னை மாநகரத்தில் நவீன மீன் அங்காடிகள் துவக்கப்பட்டு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் தரமான மற்றும் நியாயமான விலையில் புரதச்சத்து மிகுந்த மீன்கள் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கோவை மாநகரிலும் செயல்படுத்திட கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது காந்திபுரம் மின் வாரியத்திற்கு அருகில் கழக அங்காடிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியில் (10’ X 11’) இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில் சற்று கூடுதல் இடம் (25’ X 20’) தேவைப்படுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு நவீன மீன் அங்காடி அமைக்க கூடுதல் இடம் வழங்குவது குறித்து முடிவு செய்யவும் அதற்குண்டான மாதாந்திர உரிமக் கட்டணத்தை நடைமுறையில் உள்ள விதிமுறைகளின் படி நிர்ணயம் செய்து, பெறுவது குறித்து முடிவு செய்யவும் மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண். 15404 / 2007 / அ4 (வ)

**மா.ந.ம.தீர்மானம் எண் : 359 நாள் : 19.02.2009**

சம்பந்தப்பட்ட வார்டு மாமன்ற உறுப்பினர், மண்டலத் தலைவர் ஆகியோருடன் இடத்தை ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, எல்லைத் தோட்டம் சாலைக்கும், அவினாசி சாலைக்கும் இணைப்புச் சாலையாக ரங்கவிலாஸ் நகர் சாலையை 50 ஆண்டுகளுக்கும் மேலாக பொதுமக்கள் உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

இச்சாலையை அடைக்க சர்தார் வல்லபாய் பட்டேல் டெக்ஸ்டைல்ஸ் காலேஜ் நிறுவனத்தினர் தடையை ஏற்படுத்தி உள்ளனர். இதனை பொதுமக்கள் பலமுறை ஆட்சேபனை செய்து தடையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். இச்சாலையை மாநகராட்சி மூலமாக நிரந்தரமாக அமைத்து தரவேண்டும் என தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீரங்கவிலாஸ் மில் (NTC Mill) எதிர்புறம் வடக்கு நோக்கி செல்லும், மில்லுக்கு சொந்தமான பட்டா பூமி வழியாக மேற்படி பூமிகளுக்கு வடக்கு பகுதியில் சௌரிபாளையம் மற்றும் விளாங்குறிச்சி கிராமத்தில் குடியிருக்கும் பொது மக்கள் கடந்த 50 ஆண்டுகளாக மேற்படி பாதை உபயோகித்து வருகிறார்கள்.

எல்லைத் தோட்டத்தில் இருந்து க.ச.எண்.484 விளாங்குறிச்சி கிராமம் மேற்கு பகுதியில் சுமார் 134'0" x 30'0" கொண்ட இடத்தை பொது மக்கள் பயன்படுத்துவதற்காக கோவை மாநகராட்சி சாலை அமைத்துக் கொடுப்பதற்கு ஆட்சேபனையில்லை என தெரிவித்து R.சகுந்தலா நில உரிமையாளர் ஆட்சேபனையின்மை கடிதம் கொடுத்துள்ளார். க..ச எண். 484 விளாங்குறிச்சி கிராமம் பகுதியில் சுமார் 200'0" x 30'0" கொண்ட இடத்தை கோவை மாநகராட்சியால் சாலை அமைத்துக் கொடுப்பதற்கு ஆட்சேபனையில்லை என தெரிவித்து V.வெங்கடேசன் நில உரிமையாளர் ஆட்சேபனையின்மை கடிதம் கொடுத்துள்ளார்.

S.F.No.471/1 பாகம் சௌரிபாளையம் கிராமம் இடத்தில் சுமார் 510'0" x 30'0" அகலத்தில் NTC மில் நிறுவனத்திடமும், S.F.No.471/1 பாகம் சௌரிபாளையம் கிராமம் இடத்தில் சுமார் 527'0" x 30'0" அகலத்தில் அவினாசி சாலை வரை சர்தார் வல்லபாய் பட்டேல் டெக்ஸ்டைல் காலேஜ் (மினிஸ்ட்ரி ஆப் டெக்ஸ்டைல்ஸ்)-க்கு சொந்தமான இடத்திலும் சாலை அமைத்தால், எல்லைத் தோட்டம் சாலையில் இருந்து அவினாசி சாலையை அடையலாம். எனவே NTC மில் நிறுவனத்திடம் இருந்தும், சர்தார் வல்லபாய் டெக்ஸ்டைல்ஸ் காலேஜ் நிறுவனத்திடமும் பேச்சு வார்த்தை மூலமாக நிலத்தைப் பெற்று சாலை அமைக்கலாம்.

இது சம்பந்தமாக நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழுவில் தீர்மானம் எண்.71, நாள். 27.01.2009-ன்படி எல்லைத் தோட்டம் சாலை முதல் அவினாசி சாலை வரை புதிய இணைப்புச் சாலை அமைக்க துணை மேயர், வடக்கு மண்டலத்தலைவர், 2-வது வட்டார மாமன்ற உறுப்பினர் மற்றும் அப்பகுதி பொது மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

இதனை மாமன்றத்தின் முடிவுக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 16927 / 08 / எச் 2(வ)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 360 நாள் : 19.02.2009</u>

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு NTC மில் நிறுவனத்திடமிருந்தும், சர்தார் வல்லபாய் டெக்ஸ்டைல்ஸ் கல்லூரி நிறுவனத்திடமிருந்தும் நிலத்தை பேச்சுவார்த்தை மூலம் தானமாகப் பெற்று எல்லைத் தோட்டம் சாலையில் இருந்து அவினாசி சாலையை இணைக்கும் இணைப்புச் சாலை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 9

கோவை மாநகராட்சி உக்கடம் மீன் விற்பனை சந்தையினை உலக சுகாதார தரத்திற்கு உயர்த்தி மீன் விற்பனை செய்வதற்கு தேசிய மீன் வள துறையின் மூலம் கட்டி செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி துறையின் நிதியின் மூலம் இப்பணி செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக உக்கடம் பைபாஸ் சாலையில் அமைந்துள்ள மீன் மொத்த வியாபார இடத்தை நீண்டகால வாடகை அடிப்படையில் கோரியுள்ளார்கள்.

எனவே மேற்படி இடத்தை மீன்வள துறைக்கு ஒதுக்கவும், வாடகை நிர்ணயம் செய்யவும், காலக்கெடு நிர்ணயிக்கவும் மன்றத்தின் முடிவுக்கு பொருள் வைத்து அரசிற்கு பிரேரனை அனுப்பலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 1132/09/டி1

**மா.ந.ம.தீர்மானம் எண் : 361 நாள் : 19.02.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## சிறப்புத் தீர்மானம் 2

கடந்த 29.1.2009 அன்று நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் சி.பி.ஐ. இயக்கத்தைச் சேர்ந்த 59-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ஆர். கல்யாணசுந்தரம் அவர்கள் துணை மேயரை அடிக்கச் சென்றதாக தெரிவித்தும், 57-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எம்.எஸ். வேல்முருகன் அவர்கள் அஜெண்டாவை கிழித்து எரிந்ததாக தெரிவித்தும், சபை மரபுகளை மீறி நடந்து கொண்டதாக தெரிவித்து இவர்கள் இருவரையும் ஒரு மாமன்ற கூட்டத்திற்கு சஸ்பென்ட் செய்யவேண்டும் என்கின்ற வேண்டுகோளினை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முன்மொழிவதாக மாமன்ற எதிர்கட்சித் தலைவர் அவர்களால் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**மா.ந.மன்ற தீர்மானம் எண். 362 நாள் 19.2.009**

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சபை மரபுகளுக்கு மாறுபட்டு நடந்த 57-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு எம்.எஸ். வேல்முருகன் அவர்களையும், 59-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ஆர். கல்யாணசுந்தரம் அவர்களையும் அடுத்த ஒரு மாமன்ற கூட்டத்திற்கு சஸ்பென்ட் செய்வதாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இதனைப் பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி